# செய்தி வெளியீடு

தேனி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள 336 அங்கன்வாடி பணியாளர், 22 குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் 362 அங்கன்வாடி உதவியாளர் பதவிகளுக்கு இனச்சுழற்சி முறையில் நேர்முகத்தேர்வு மூலம் தேர்வு செய்ய தகுதியான உள்ளூர் பெண் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம் என தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ந. வெங்கடாசலம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

காலிப்பணியிட விபரம்

| வ.எ ண் | வட்டாரத்தின் பெயர் | அங்கன்வாடி பணியாளர் | குறு அங்கன்வாடி பணியாளர் | அங்கன்வாடி உதவியாளர் |
|---|---|---|---|---|
| 1 | ஆண்டிபட்டி | 35 | 5 | 40 |
| 2 | பெரியகுளம் | 52 | 4 | 60 |
| 3 | க.மயிலாடும்பாறை | 27 | 4 | 32 |
| 4 | தேனி (ஊரகம்) | 27 | 2 | 30 |
| 5 | தேனி (நகர்புறம்) | 47 | 0 | 34 |
| 6 | சின்னமனூர் | 43 | 0 | 39 |
| 7 | போடிநாயக்கனூர் | 38 | 2 | 37 |
| 8 | உத்தமபாளையம் | 17 | 3 | 42 |
| 9 | கம்பம் | 50 | 2 | 48 |
| | மொத்தம் | 336 | 22 | 362 |

<u>அங்கன்வாடி பணியாளர் மற்றும் குறு அங்கன்வாடி பணியாளருக்கான தகுதிகள்</u>

1. 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
2. 01.07.2017 அன்று 25 வயது முடிந்து 35 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.
3. கணவரை இழந்தவர்கள், கணவரால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் மலைப்பகுதியில் வசிப்பவர்கள் 40 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.
4. மலைப்பகுதியில் வசிப்பவர்கள் எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றும் குறைந்த பட்சம் 20 வயது பூர்த்தி அடைந்தும் இருக்கவேண்டும்.
5. மாற்றுத்திறனாளிகள் 01.07.2017 அன்று 25 வயதுக்கு குறையாதவராகவும் 38 வயதுக்கு மிகாதவராகவும் இருத்தல் வேண்டும்.
6. காலிப்பணியிடம் உள்ள அதே பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

அங்கன்வாடி உதவியாளர் பணிக்கான தகுதிகள்

1. எழுதப்படிக்க தெரிந்தவராக இருக்க வேண்டும்.
2. 01.07.2017 அன்று 20 வயது முடிந்து 40 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.
3. கணவரை இழந்தவர்கள், கணவரால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் மலைப்பகுதியில் வசிப்பவர்கள் 45 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும்.
4. மாற்றுத்திறனாளிகள் 01.07.2017 அன்று 20 வயதுக்கு குறையாதவராகவும் 43 வயதுக்கு மிகாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. காலிப்பணியிடம் உள்ள அதே பகுதியில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

இன சுழற்சி அடிப்படையில் முன்னுரிமை பெற்ற காலிப்பணியிடங்களுக்கு கீழ்க்காணும் நபர்கள் தகுதியுடையவர் ஆவார்.

1. ஆதரவற்ற விதவை (வருவாய் கோட்டாட்சியரிடம் சான்று பெற்றிருக்க வேண்டும்)
2. கலப்பு திருமணம் செய்தவர்
3. முன்னாள் ராணுவத்தினர் மற்றும் பணியில் உள்ள ராணுவத்தினரை சார்ந்தவர்கள்.
4. சுதந்திர போராட்ட தியாகியின் வாரிசுகள்
5. அரசால் நிலம் கையகப்படுத்தப்பட்டவர்கள்
6. சீர்திருத்தப்பள்ளியில் இருந்து வந்தவர்கள்
7. மாற்றுத்திறனாளிகள் (ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளை கையாளக்கூடிய திறன்படைத்த கை, கால் பாதிக்கப்பட்டவர்கள்)

விண்ணப்பதாரரின் வசிப்பிட ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை, வீட்டு வரி ரசீது, குடும்ப அட்டை, ஆதார் அட்டை இவற்றில் ஏதேனும் ஒரு சான்று விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும். இத்துடன் கல்வி சான்றிதழ், சாதிச்சான்றிதழ், விதவை, கணவரால் கைவிடப்பட்டவர், ஆதரவற்றவர், மாற்றுத்திறனாளி எனில் அதற்குரிய சான்றுகளை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை www.icds.tn.nic.in என்ற இணையதளத்திலோ அல்லது குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலக தகவல் பலகையில் உள்ள மாதிரியின்படியோ உள்ள படிவத்தில் பூர்த்தி செய்து உரிய சான்றுகளுடன் சம்பந்தப்பட்ட குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலகத்தில் 07.08.2017

முதல் 12.08.2017 முடிய மற்றும் 16.08.2017 முதல் 19.08.2017 முடிய காலை 10.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை வழங்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலகத்திலேயே வழங்கவேண்டும். குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலகம் அல்லாத பிற அலுவலகங்களில் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் நேர்முகத்தேர்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த பகுதியில் உள்ள குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலரை அணுகலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
தேனி